<u>சுருக்கம்</u>

பொதுப்பணித் துறை – சென்னை மண்டலத்தின் ஆளுகையின் கீழ், சென்னையை தலைமையிடமாகக் கொண்டு தற்போது இயங்கி வரும் வட்ட மற்றும் கோட்ட அலுவலகங்களின் பெயர்கள், அவற்றைச் சார்ந்த கோட்டங்கள் மற்றும் அவற்றின் உப கோட்டங்களின் பெயர்கள், தலைமையிடங்கள், நிர்வாகக் கட்டுப்பாடுகளை மாற்றி நிர்ணயம் செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.


---

பொதுப்பணி (ஜி1) த்துறை

அரசாணை (நிலை) எண். 07

நாள்: 14.03.2025
குரோதி, மாசி–30,
திருவள்ளுவர் ஆண்டு–2056.
<u>படிக்கப்பட்டது</u>:

1. அரசாணை (நிலை) எண்.77, பொதுப்பணி (ஜி1) த்துறை, நாள் 24.08.2022.
2. அரசாணை (டி) எண்.76, பொதுப்பணி (ஜி2) த்துறை, நாள் 10.07.2024.
3. முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொதுப்பணித் துறை, சென்னை அவர்களின் கடிதம் எண்.உசெபொ/டி1/18659/2022, நாள் 22.10.2024 மற்றும் 23.12.2024.

******

<u>ஆணை:</u>

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பணிப்பெயர்ச்சி அடிப்படையில் உருவாக்கப்பட்ட வட்டங்கள், கோட்டங்கள், உபகோட்டங்கள் மற்றும் பிரிவு அலுவலகங்களின் பெயர்கள் மற்றும் தலைமையிடங்களை மாற்றி நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மூன்று வருடங்களுக்கு பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் உபகோட்டங்கள் மற்றும் பிரிவு அலுவலகங்களின் தலைமையிடங்களை மாற்றுவதற்கான அதிகாரங்களை கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை அவர்கள் பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்:–

(1) சென்னை பெருநகரம், தமிழ் நாட்டின் தலைநகரமாக மட்டுமில்லாமல், இந்தியாவின் நான்காவது பெருநகரமாகும். எனவே, தமிழகத்தின் மற்ற மாவட்டங்களை போல் இல்லாமல், சென்னையைப் பொறுத்தவரை

பொதுப்பணித் துறையின் வாயிலாக கட்டப்படும் அனைத்து கட்டட கட்டுமானங்களுக்கென பிரத்யேகமாக 1 வட்ட அலுவலகம் மற்றும் அதனைச் சார்ந்த 2 கட்டுமான கோட்டங்கள், செங்கல்பட்டு, திருவள்ளூர் கட்டட மற்றும் பராமரிப்பு கோட்டங்கள் மற்றும் அனைத்து அரசுக் கட்டடங்களை பராமரிப்பதற்காக பிரத்யேகமாக 1 வட்ட அலுவலகம் மற்றும் அதனைச் சார்ந்த 3 பராமரிப்பு கோட்டங்கள் மற்றும் 2 மின் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கென பிரத்யேகமாக 2 வட்ட அலுவலகங்களின் கட்டுப்பாட்டின்கீழ் 2 மின் கோட்டங்கள் ஆகியவை தற்போது இயங்கி வருகின்றன.

(2) சென்னையை பொறுத்தவரை 4 மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகள், கிண்டியில் அமைந்துள்ள கிங் நோய்த்தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையம், அரும்பாக்கத்தில் அமைந்துள்ள அரசு சித்தா மருத்துவமனை மற்றும் பல அரசு மருத்துவமனைகள், தலைமைச் செலயகம், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம், மாண்புமிகு ஆளுநர் குடியிருப்பு, மாண்புமிகு நீதியரசர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர்களின் குடியிருப்புகள், தாடண்டர் நகரில் உள்ள அரசு அதிகாரிகள் மற்றும் அரசு அலுவலர்களின் குடியிருப்புகள் மற்றும் பல அரசுத் துறை கட்டடங்கள் ஆகிய வளாகங்களில் புதிய கட்டுமானப் பணிகளின் தளங்களை ஆய்வு செய்வது, மேற்பார்வையிடுவது, சார்நிலை அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்குவது, பணிகளின் முன்னேற்ற அறிக்கைகளை தலைமைப் பொறியாளருக்கு சமர்ப்பிப்பது ஆகியவற்றை தற்போதுள்ள ஒரு கண்காணிப்புப் பொறியாளர் மட்டுமே பார்க்கும்படியான சூழ்நிலை இருக்கிறது.

(3) மேலும், இதேபோன்று மேற்குறிப்பிடப்பட்டுள்ள அரசு மருத்துவமனைகள் / அரசு குடியிருப்புகள் / அரசுத் துறை கட்டடங்கள் ஆகியவற்றின் பராமரிப்புப் பணிகளின் தளங்களை ஆய்வு செய்வது, மேற்பார்வையிடுவது, சார்நிலை அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்குவது, பணிகளின் முன்னேற்ற அறிக்கைகளை தலைமைப் பொறியாளருக்கு சமர்ப்பிப்பது ஆகியவற்றை தற்போதுள்ள ஒரு கண்காணிப்புப் பொறியாளர் மட்டுமே பார்க்கும்படியான சூழ்நிலை இருக்கிறது.

(4) மேற்குறிப்பிட்டுள்ள சென்னையிலுள்ள அனைத்து அரசுத் துறை கட்டடங்களின் பராமரிப்புப் பணிகள் மற்றும் புதிய கட்டுமானப் பணிகள் ஆகியவற்றை தற்போதுள்ளபடி பராமரிப்புப் பணிகளுக்கென உள்ள ஒரு கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் புதிய கட்டுமானப் பணிகளுக்கென உள்ள ஒரு கண்காணிப்புப் பொறியாளர் ஆகிய இருவரால் தனித்தனியாக மேற்பார்வையிடுவதில் சிரமமான சூழ்நிலை இருப்பதால், சென்னை மாவட்டத்தை வட்டம்-1 மற்றும் வட்டம்-2 எனப் பிரித்து இரு கண்காணிப்புப் பொறியாளர்களும் அனைத்து கட்டடப் பராமரிப்புப் பணிகள் மற்றும் புதிய கட்டட கட்டுமானப் பணிகள் ஆகியவற்றை மேற்பார்வையிட்டு, பணிகளை குறித்த நேரத்தில் முடிக்கலாம் என்றும் மேலும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துப் பணிகளையும் மக்கள் பயன்பெறும் வண்ணம் மிகவும் துரிதமாக முடிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

4. மேலும், முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை அவர்கள் தமிழகத்தில் வளர்ந்து வரும் புதிய நவீன கட்டுமானங்களின் சூழ்நிலைகளுக்கேற்ப, புதிய கட்டுமானங்கள் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கென அரசு ஒதுக்கும் ஆண்டுத் தொகையை சீரான முறையில் அனைத்துக் கோட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதை கருத்திற்கொண்டும் பொதுப்பணித் துறையில் சென்னை மண்டலத்தின் ஆளுகையின் கீழ் நடைபெறும் அனைத்து விதமான கட்டட கட்டுமானம், மின் கட்டுமானம், கட்டடப் பராமரிப்பு மற்றும் மின் பராமரிப்புப் பணிகள் ஆகியவற்றை இரு வட்டங்களைச் சார்ந்த கண்காணிப்புப் பொறியாளர்கள் அலுவலகங்களின் பெயர்களையும், இரு வட்டங்களின் கீழ் தற்போது இயங்கி வரும் கோட்டங்களின் பெயர்களையும் நிர்வாகக் காரணங்களுக்காக பெயர் மற்றும் நிர்வாகக் கட்டுப்பாடுகளை மாற்றி மறுசீரமைப்பு செய்தும், சில பணியிடங்களை மட்டும் பணிப்பெயர்ச்சி மற்றும் பணிப்பரவலாக்கம் முறையில் மாற்றம் செய்தும் ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, அவர்களின் கருத்துருவினை நன்கு ஆய்வு செய்த பின்னர் அதனை ஏற்று, சென்னையிலுள்ள இரு கண்காணிப்புப் பொறியாளர்களும் (வட்டம்-1 மற்றும் வட்டம்-2) அனைத்து கட்டடப் பராமரிப்புப் பணிகள் மற்றும் புதிய கட்டட கட்டுமானப் பணிகள் ஆகியவற்றை மேற்பார்வையிட்டு பணிகளை துரிதமாக செயல்படுத்தி அனைத்து கட்டடப் பணிகளையும் செம்மையாகவும், நல்ல தரத்துடனும் முடித்திடும் நோக்கில் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு தற்போது இயங்கி வரும் இரண்டு வட்ட அலுவலகங்களின் பெயர்கள், அவற்றைச் சார்ந்த கோட்டங்களின் பெயர்கள் மற்றும் நிர்வாகக் கட்டுப்பாடுகள் கீழ்க்குறிப்பிட்டவாறு மாற்றம் செய்து அரசு ஆணையிடுகிறது:-

| தற்போதுள்ள பெயர் மற்றும் நிர்வாகக் கட்டுப்பாடு | பெயர் மற்றும் நிர்வாகக் கட்டுப்பாடுகளை மாற்றிய பின் |
|---|---|
| **தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், சென்னை-5 அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ்** | **தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், சென்னை-5 அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ்** |
| **கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித் துறை, கட்டட பராமரிப்பு வட்டம், சென்னை-5**<br><br>1. வட மாநில கோட்டம், சென்னை-5<br>2. தென் மாநில கோட்டம், சென்னை-5<br>3. கட்டட பராமரிப்பு கோட்டம், சென்னை-5<br>4. மின் கோட்டம்-2, சென்னை-5 | **கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித் துறை, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்-1, சென்னை-5**<br><br>1. கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, வட மாநில கோட்டம், சென்னை-5 (வட மாநில கோட்டம்)<br>2. கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம்-2, சென்னை-5 (கட்டட கட்டுமான கோட்டம்-2)<br>3. கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம்-3, சென்னை-5 (கட்டட பராமரிப்பு கோட்டம்) |

| தற்போதுள்ள பெயர் மற்றும் நிர்வாகக் கட்டுப்பாடு | பெயர் மற்றும் நிர்வாகக் கட்டுப்பாடுகளை மாற்றிய பின் |
|---|---|
| | 4. கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், திருவள்ளூர்<br>5. மின் கோட்டம்-1, சென்னை-5 |
| கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித் துறை, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், சென்னை-5. | கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித் துறை, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்-2, சென்னை-5. |
| 1. கட்டட கட்டுமானக் கோட்டம்-1, சென்னை-5.<br>2. கட்டட கட்டுமானக் கோட்டம்-2, சென்னை-5.<br>3. கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், திருவள்ளூர்.<br>4. கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், செங்கல்பட்டு. | 1. கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, தென் மாநிலக் கோட்டம், சென்னை-5. (தென் மாநில கோட்டம்)<br>2. கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம்-1, சென்னை-5 (கட்டட கட்டுமான கோட்டம்-1)<br>3. கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், செங்கல்பட்டு. |
| 5. மின் கோட்டம்-1, சென்னை-5. | 4. மின் கோட்டம்-2, சென்னை-5. |

6. மேலும், மேற்குறிப்பிட்டுள்ள வட்டம் மற்றும் கோட்டங்களைச் சார்ந்த உபகோட்டங்கள் மற்றும் அவற்றின் பிரிவுகள் ஆகியவற்றை அரசால் நிர்ணயிக்கப்பட்ட 1169 பணியிடங்களின் எண்ணிக்கைக்கு மிகாமல் பணிப்பெயர்ச்சி மற்றும் மறுபரவலாக்கம் அடிப்படையில் பெயர்கள், தலைமை இடங்கள் மற்றும் நிர்வாகக் கட்டுப்பாடுகளை மாற்றி நிர்ணயம் செய்வதற்கான அதிகாரங்கள் பொதுப்பணித் துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

7. இவ்வாணை 01.04.2025-க்கு பின்னர் நடைமுறைப்படுத்த முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.e-கோப்பு எண்.1103/ உள்கட்டமைப்பு-I/2024, நாள் 26.02.2025-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ஜெயகாந்தன்
அரசுச் செயலாளர்

பெறுநர்

முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சேப்பாக்கம், சென்னை-5.

தலைமைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, சென்னை மண்டலம், சென்னை.

மாநில கணக்காயர் (A&E), சென்னை-18.

மாநில கணக்காயர் (Audit-I), சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-8.

**நகல்:-**

மாண்புமிகு அமைச்சர் பொதுப்பணித் துறை அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை-9.
பொதுப்பணித் (பணி-I / பணி-II) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
நிதித் ( உள்கட்டமைப்பு-I) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
இருப்பிடத் தணிக்கை அலுவலர் (பொது மற்றும் சமூகத்துறை தணிக்கை),
தலைமைச் செயலகம், சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

14.03.2025

பிரிவு அலுவலர்

14/03/2025